

Rotary





# Voice of Rice City

## நெல் நகரின் குரல்

ஜூலை 2025



Rtn.L.செந்தில்குமார்
தலைவர்



Rtn.B.செந்தில்
செயலாளர்



Rtn.D.மோகனசுந்தரம்
பொருளாளர்

## ஆடுதுறை ரோட்டரி சங்கம்
## (2025 - 26)



சிறப்பு விருந்தினர்கள்



தலைவர் காலர் அணிவித்தல்



செயலருக்கு சான்றிதழ் அளித்தல்



கண் மாற்று சிகிச்சைக்காக


கூட்டத்தில் ஒரு பகுதி


கூட்டத்தில் ஒரு பகுதி


தமிழ் பாடத்தில் முழு மதிப்பெண் பெற்ற மாணவிக்கு சான்றிதழ்


பள்ளி அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிக்கு சான்றிதழ்



உ
சிவமயம்





திருக்கயிலாய பரம்பரைத்

# திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்து நான்காவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருவாவடுதுறை (அஞ்சல்) - 609 803, நாகை மாவட்டம். தொலைபேசி : 04364 - 232021

நாள் : 29.07.2025

## <u>அருள் வாழ்த்துரை</u>

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்

– திருக்குறள்.

மனிதநேயச் சிந்தனைகளின் அடிப்படையில் மகத்தான தொண்டுகளைத் தொடர்ந்து செய்வதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள ஆடுதுறை ரோட்டரி சங்கம் " VOICE OF RICE CITY - நெல் நகரின் குரல்" என்ற மாத இதழை வெளியிடவுள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

இதன் மூலம் ஆடுதுறை ரோட்டரி சங்கத்தின் சமுதாய நலப் பணிகளைப் பலரும் அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பு ஏற்படும். இந்த மாத இதழ் பயனுள்ள பல தகவல்களையும் தாங்கி மக்களுக்கு நலம் பல விளைய வேண்டும் எனவும் திரு. L. செந்தில்குமார் அவர்களின் தலைமையில் ரோட்டரி சங்கம் புகழ் பெற்றுத் திகழ வேண்டுமெனவும் நமது ஆன்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம் ★ திருவாவடுதுறை ★

பெறுநர் :

திருமிகு. Rtn. **L. செந்தில்குமார்** அவர்கள்,
தலைவர், ஆடுதுறை ரோட்டரி சங்கம்,
நரசிங்கன்பேட்டை.




தோற்றம் 14-ஆம் நூற்றாண்டு    போன்: 04364 - 232021

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

## ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள்

வாழ்த்தி வழங்கியருளும்

# குரு அருட்கொடை

திருவருள் பெருகிச்
சிறப்புற வாழ்க !

# தலைவர் உரை

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் அப்பர் பெருமானின் சித்தாந்தத்தைச் செயல்வடிவமாக்கி, இம்மண்ணுக்கும் மக்களுக்கும் நற்பணியாற்றி வரும் சமூகத் தொண்டர்கள் அனைவருக்கும் இனிய வணக்கம்.

திருமூலரின்,

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"

எனும் அமுதமொழி

வள்ளலாரின் 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்ற கருணை நெஞ்சம்.

வள்ளுவரின் 'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி' என்ற அறவழி – இவை அனைத்தும் ரோட்டரியின் அடிப்படைக் கொள்கைகளுடன் ஆழமாகப் பிணைந்துள்ளதாக நான் உணர்கின்றேன். இந்த உயரிய நோக்கங்களால் ஈர்க்கப்பட்டு சுமார் 15 ஆண்டுகளாக ரோட்டரி சமுதாயக் குழுமத்தில் கிராம அளவில் சேவை செய்து வந்த நான் தற்போது ஆடுதுறை ரோட்டரி சங்கத்தில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பையும் இந்த ஆண்டு தலைவராகப் பொறுப்பேற்கும் பெரும் பாக்கியத்தையும் பெற்றமைக்கு உளமார் நன்றி கூறுகிறேன்.

நமது ஆடுதுறை சங்கம், கிராமப்புறங்களைச் சார்ந்து அமைந்திருந்தாலும், ஒரு மாவட்ட ஆளுநரைத் தந்து புகழோடு செயல்பட்டு வருவது நமக்கெல்லாம் பெருமை. இச்சங்கத்தின் பெருமைக்கும் வளர்ச்சிக்கும் எனது முழு உழைப்பையும் அர்ப்பணிப்பேன் என்பதை இவ்வினிய வேளையில் உறுதியுடன் தெரிவித்துக் கொள்வதுடன்..

சமூக சேவைகளில் கரம் கொடுத்து அனைவரும் உதவ வேண்டுமாறு பேரன்புடன் வேண்டுகிறேன்.

இயன்றதைச் செய்வோம்,
இயலும்வரை செய்வோம்,
இயலாததை கூடிச் செய்திட முயற்சிப்போம்.



என்றும் சமூகப்பணியில்...
Rtn.**G.L.செந்தில்குமார்,**
தலைவர் – 2025 – 2026,
ரோட்டரி சங்கம், ஆடுதுறை.

# செயலர் உரை

**"முழுமுதற்பொருளேமூலாதாரமே**
**பதம் பணிகின்றேன்**
**நாளும் எமைக் காப்பாயே**
**ஞான விநாயகனே போற்றி! போற்றி!!"**

என்னை சீராட்டி, தாலாட்டி வளர்த்த என் தாய், தந்தையரையும், எனக்கு ஞானமளித்து வழிகாட்டிய என் சிறிய தந்தையையும் என்றும் என் நெஞ்சில் வாழும் தெய்வங்களாக வணங்குகின்றேன்.

**எழுமின்! விழுமின்! குறிக்கோளை அடையும் வரை நில்லாது உழைமின்!**

**"Arise Awake And Stop Not Till The Goal Reached."**

பாரததேசத்து இளைஞர்களை தம் காந்த பார்வையாலும், அறிவார்ந்த கருத்துக்களாலும் தன்பால் ஈர்த்த பாரததேசத்தின் வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் மந்திரச் சொல் இது.

பிறப்பதும், பிறந்தபின் நல்வழியில் நடந்து நற்காரியங்கள் செய்து, உலகம் நம்மைப் போற்ற வாழ்வதே நம் பிறவியின் பயனாகும்.

கடந்த 28 ஆண்டுகளாக ஆசிரியர் பணியாற்றி வரும் நான், ஆசிரியர் இயக்கங்களில் பொறுப்புகளை வகித்து, ஆசிரியர், மாணவர் மற்றும் பள்ளியின் நலனில் உறுதுணையாக இருந்து சேவையாற்றி வருகிறேன்.

ஆன்மீக, அறப்பணிகளில் நண்பர்களுடன் இணைந்து என் பங்களிப்பையும் செய்து வருகிறேன்.

ஆடுதுறை ரோட்டரி சங்கத்தின் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கு செயலாளராக பொறுப்பேற்கும் பெரும் பேற்றினை பெற்றுள்ள நான், ரோட்டரி சங்கத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் சேவைக்கும் கடமையாற்றுவேன்.

**"நட்பிற்கு வீற்றிருக்கையாதெனின்கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை."**

குறள் 789

இனிமைத் தமிழும் நல்லறம் கூறும் திருக்குறளும் காட்டும் நல்வழியில் நடப்போம் நலமுடன் வாழ்வோம்



**"வாழ்க தமிழ்! வளர்க ஆடுதுறை ரோட்டரி சங்கம் !!"**

என்றும் சமூகப் பணியில்
**Rtn.B. செந்தில்,**
**செயலாளர் 2025-2026,**
**ரோட்டரி சங்கம் ,**
**ஆடுதுறை 612 101**



# பொருளாளர், Rtn.D.மோகனசுந்தரம் அவர்களைப் பற்றி

நம் சங்கப் பொருளாளர் அவர்கள் திரு. **S.**தண்டபாணி பிள்ளை – வசந்தா அம்மையாருக்கு மகனாக பிறந்தவர். விவசாயக் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட இவர் பள்ளிக் கல்வியை ஆடுதுறை **K.G.S.** பள்ளியில் பயின்றார். பின்னர் தனது தந்தை துவக்கி நடத்தி வந்த "பாலன் சிட்பண்ட்ஸ்" நிறுவனத்தில் அடிப்படையிலிருந்து பயணித்து அதனை "பாலன் சிட்பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்" ஆக மாற்றியவர். 60 ஆண்டுகளைக் கடந்த வைர விழா நிறுவனத்தின் தாரக மந்திரமாக "நம்பிக்கை, நாணயம், கைராசி" எனும் வார்த்தைக்கேற்ப அதன் நிர்வாக இயக்குனராக திறம்பட செயல்பட்டு வருபவர்.

எளிமையின் அடையாளம், பல்தொழில் வித்தகரான இவர் நமது ஆடுதுறை ரோட்டரி சங்கம் தோற்றுவிக்கப்பட்ட மூன்றாவது ஆண்டில் தன்னை உறுப்பினராகவும், ஆண்டு தலைவராக இருந்த காலத்தில் சங்கச் செயலாளராகவும், ஆண்டில் சங்கத்தின் தலைவராகவும் கடந்த பத்து ஆண்டுகளாக பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

கடந்த பதினைத்து வருடங்களாக நமது சங்கத்துடன் இணைந்து சித்திரை மாதம் வைத்தீஸ்வரன் கோயில் செல்லும் சுமார் பத்தாயிரம் பக்தகோடிகளுக்கு தேனீர், பிஸ்கட் வழங்குதல், கோட்டூர் ஊராட்சியில் ஐந்து வருடமாக அனைத்து வீடுகளுக்கும் பொங்கல் சீர்வரிசை வழங்குதல், கொரோனா காலத்தில் இவ்வூராட்சியின் அனைத்து வீடுகளுக்கும் மளிகை, காய்கறி பொருட்களை வழங்கியது, கடந்த மூன்று வருடமாக மாசிமக பெருவிழாவில் சேகரிக்கப்படும் உணவுப் பொருட்களை ஆதரவற்றோர் இல்லங்களுக்கு வழங்குவது போன்றவை இவரது ரோட்டரி சமுதாய செயல்பாடுகளில் சில அடையாளங்களாகும்.

| | |
|---|---|
| Rtn.**B.செந்தில்** | Rtn.**G.L.செந்தில்குமார்** |
| செயலர் | தலைவர் |

# பணியேற்பு நிகழ்வுகள்

பாரம்பரியமிக்க ஆடுதுறை ரோட்டரி சங்கத்தின் பதவியேற்பு விழா ஜுலை மாதம் 12ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் ஆடுதுறை வீரசோழன் திருமண மண்டபத்தில் மிகச் சிறப்பாக அரங்கேறியது. 2024-25 தலைவராக இருந்த **N.**பக்கிரிசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். செயலர் கங்காதரன் கடந்த ஆண்டின் செயல் அறிக்கையை வாசித்தார்.

மண்டலம்16-ன் உதவி ஆளுநர் திரு. சு.வெங்கடேசன் பதவிப் பிரமாண உறுதி மொழியினை வாசிக்க சங்கத் தலைவர் வாசித்து ஏற்றுக்கொண்டார்.

பின்னர் தலைவர் **N.**பக்கிரிசாமி அவர்கள் புதிய தலைவர் **L.**செந்தில்குமார் அவர்களுக்கு காலர் அணிவித்து வாழ்த்து கூறினார். மு.செயலர் கங்காதரன், புதிய செயலர் திரு.**B.**செந்தில் அவர்களுக்கும் பட்டயசான்று வழங்கி வாழ்த்து கூறினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் மாவட்ட ஆளுநர் திரு.**Rtn.R.**பாலாஜி பாபு அவர்கள் தனது வாழ்த்துரையில் ரோட்டரியின் நெறிமுறைகளையும், போலியோவின் சிறப்பம்சத்தையும் விளக்கி கூறினார்.

தனியார் கட்டணமில்லாத் தமிழ் வழிப் பள்ளி நடத்தி வரும் அறத்தமிழன் பேரியக்கத்தின் நிறுவன தலைவர் திரு.விஜய். சீதாராமன் அவர்கள் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நிகழ்ச்சியினைச் சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் நம் பகுதியில் இருக்கும் அனைத்து கட்சியைச் சார்ந்த முக்கியப் பிரமுகர்கள், பல்வேறு ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் உள்ளிட்ட பொறுப்பாளர்கள், மயிலாடுதுறை ரோட்டரி சங்க உதவி ஆளுநர், அரிமா சங்க பொறுப்பாளர்கள், வர்த்தகர்கள், மருத்துவர்கள், ஆசிரியர் சங்கப் பொறுப்பாளர்கள்,

ஆசிரிய – ஆசிரியைகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பு பிரமுகர்கள் மற்றும் பெருந்திரளான மகளிர்களும் கலந்துகொண்டு பணியேற்பு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரோட்டரி உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கிராம மக்கள் சால்வைக்குப் பதிலாக போலியோ நிதியைத் தலைவர் மற்றும் செயலரிடம் வழங்கினார்கள்.

கூட்ட நிகழ்ச்சியினை **Rtn.S.**விஜயகுமார், ஆசிரியர்கள் ப.பெ.கலியமூர்த்தி, சோ.வினோத்குமார் ஆகியோர் தொகுத்து வழங்கினர். நிறைவாக செயலர் **Rtn.B.**செந்தில் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது. **A Mega Show by RC Aduthurai Award Committee - Keep on eye sir !**

12.07.2025 அறத்தமிழன் பேரியக்க நிறுவனர் திரு.விஜய் சீத்தாராமன் அவர்களிடம் நமது ஆடுதுறை ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் **Rtn.S.**லியாகத் அலி அவர்கள் பள்ளிக்கு நன்கொடையாக ரூபாய் பத்தாயிரம் வழங்கினார்கள்.

**திட்டம் 1 :** ஆடுதுறை நகரத்தைச் சுற்றி அமைந்துள்ள கிராமப்புற அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை பள்ளி அளவில் பெற்றுள்ள 30 மாணவ-மாணவிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவு பரிசுகளை முன்னாள் மாவட்ட ஆளுநர் திரு.பாலாஜி பாபு அவர்களால் வழங்கப்பட்டது.

**திட்டம் 2 :** நரசிங்கன்பேட்டையைச் சார்ந்த ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவி ஹேமனிகா-வுக்கு செயற்கை கண் பொருத்துவதற்கு ரூபாய் 15,000/- உதவித் தொகையை உதவி ஆளுநர் திரு.வெங்கடேசன் அவர்கள் முன்னிலையில் தலைவரால் வழங்கப்பட்டது.

**திட்டம் 3 :** ஆடுதுறை விஷ்ணுப்ரியா ஜுவல்லரி சார்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய எட்டு மாணவ-மாணவிகளுக்கு உயர்கல்வி பயில ஏதுவாக கல்லூரி கட்டணம் ரூபாய் 50,000/- வழங்கப்பட்டது.

**திட்டம் 4 :** பின்தங்கிய கிராமப் பகுதியான கொடியாலம் மற்றும் சிற்றிடையநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளிகள் 2024-25 கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்றதைப் பாராட்டி அப்பள்ளிகளின் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய - ஆசிரியைகளுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

**திட்டம் 5 :** ஆடுதுறை அரசு மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பு மாணவி **G.**லாவண்யாதேவி தமிழ்ப் பாடத்தில் 100-க்கு 100 மதிப்பெண் பெற்றமையைப் பாராட்டி நினைவுப் பரிசும் அதற்குத் துணை புரிந்த தமிழாசிரியர் திரு.செ.சேர்மக்கனி அவர்களுக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

**திட்டம் 6 :** 21 மாதங்களில் / 180 வார்த்தைகளை (02.05.2025) அன்று சொல்லியமைக்கு **KALAM WORD RECORD** வழங்கிய **"EXTRAORDINARY GRASPING POWER GENIUS KID"** விருதைப் பெற்ற இரட்டைகள் பி.பிரின்ஸ்டன் இம்மானுவேல், பிரின்ஸ்டா மெர்வின் பாராட்டி சான்று அளிக்கப்பட்டது.

15.07.2025 அன்று திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ 24வது குருமகா சன்னிதானம் அவர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரோட்டரி பொறுப்பாளர்களை ஆசிர்வதித்து, ரூ.10,000 போலியோ நிதியும் தந்து அருளினார்கள்.

15.7.2025 அன்று ரோட்டரி சங்க பொருளாளர் **Rtn.**திரு.**D.**மோகனசுந்தரம் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் ரோட்டரி முன்னாள் இன்னாள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு வாழ்த்தி மகிழ்ந்தனர்.

**திட்டம் 7 : அன்னப்பூரணா திட்டம் 1 :**

15.7.2025 அன்று பொருளாளர் திரு.**D.**மோகனசுந்தரம் பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை அன்பகம் காப்பகத்தில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

தொடரட்டும் "மோகனின் உதவும் கரங்கள்,

17.07.2025 அன்று ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் மருத்துவத் தம்பதிகள் **Dr.C.**அருள்ராஜ் – **Dr.**கண்ணகி அவர்களின் திருமண நாள் முன்னிட்டு ரோட்டரி பொறுப்பாளர்கள் நேரில் கலந்து கொண்டு வாழ்த்து கூறி மகிழ்ந்தனர்.

## திட்டம் 8 : அன்னப்பூரணா திட்டம் 2 :

22.7.2025 ஆடுதுறை ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் **Rtn.** டாக்டர். **C.**மணிவண்ணன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கஞ்சனூர் மற்றும் துகிலி பள்ளிகளில் மாணவச் செல்வங்களுக்கு இனிப்பு பிஸ்கட்களும், மூவலூர் அருகில் உள்ள கங்காரு முதியோர் காப்பகத்திற்குச் சென்று இரவு உணவளித்தும் சிறப்பிக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளை பொருளாளர் **Rtn.**மோகனசுந்தரம் மற்றும் **Rtn.**பரணிதரன் ஆகியோர் செய்தனர். “முதியவர்களுக்கு கரம் நீட்டுவதில் எப்பொழுதும் பரணி நம்பர் 1.”

24.07.2025 அன்று ரோட்டரி சங்க உறுப்பினர் **Rtn.**திரு.**N.**விஜயகுமார் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் ரோட்டரி முன்னாள் இன்னாள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் கூறி மகிழ்ந்தனர்.

24.07.2025 அன்று ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் வருகைபுரிந்துள்ள நம் பகுதியை சார்ந்த **கனடா நாட்டு முன்னாள் ஆளுநர்** திரு. **PDG.Rtn.**ராஜகோபால் **(RID 5050, Canada)** அவர்களை நமது சங்க உறுப்பினர்கள் சந்தித்து சால்வை அணிவித்தனர்.

29.07.2025 அன்று ரோட்டரி சங்க உறுப்பினர் **Rtn.**திரு.**N.**செல்வகுமரன் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் ரோட்டரி முன்னாள் இன்னாள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் கூறி மகிழ்ந்தனர். ***Good job by Senthil & Senthil.***

## எ (செ) ம்மொழி

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆ | ------ | பசு |
| 2. | ஈ | ------ | கொடு, பறக்கும் பூச்சி |
| 3. | ஊ | ------ | தசை, இறைச்சி |
| 4. | ஏ | ------ | அம்பு |
| 5. | ஐ | ------ | ஐந்து, அழகு, தலைவன், வியப்பு |
| 6. | ஓ | ------ | வினா, மதகு – நீர் தாங்கும் |
| 7. | கா. | ------ | சோலை, காத்தல் |
| 8. | கூ | ------ | பூமி, கூவுதல் |
| 9. | கை | ------ | கரம், உறுப்பு |
| 10. | கோ | ------ | அரசன், தலைவன், இறைவன் |
| 11. | சா | ------ | இறப்பு, மரணம், பேய், சாதல் |
| 12. | சீ | ------ | இகழ்ச்சி, திருமகள் |
| 13. | சே | ------ | எருது, அழிஞ்சில் மரம் |
| 14. | சோ | ------ | மதில் |
| 15. | தா | ------ | கொடு, கேட்பது |
| 16. | தீ | ------ | நெருப்பு |
| 17. | து | ------ | கெடு, உண், பிரிவு, உணவு, இறகு |
| 18. | தூ | ------ | வெண்மை, தூய்மை |
| 19. | தே | ------ | நாயகன், தெய்வம் |
| 20. | தை | ------ | மாதம் |
| 21. | நா | ------ | நாக்கு |
| 22. | நீ | ------ | நின்னை |
| 23. | நே | ------ | அன்பு, நேயம் |
| 24. | நை | ------ | வருந்து, நைதல் |
| 25. | நெ | ------ | நொண்டி, துன்பம் |
| 26. | நோ | ------ | நோவு, வருத்தம் |
| 27. | பா | ------ | பாட்டு, நிழல், அழகு |
| 28. | பூ | ------ | மலர் |
| 29. | பே | ------ | மேகம், நுரை, அழகு |
| 30. | பை | ------ | பாம்புப் படம், பசுமை, உறை |
| 31. | போ | ------ | செல் |
| 32. | மா | ------ | மாமரம், பெரிய, விலங்கு |
| 33. | மீ | ------ | ஆகாயம், மேலே, உயரம் |
| 34. | மூ | ------ | மூன்று, மூப்பு |
| 35. | மே | ------ | மேன்மை, மேல் |
| 36. | மை | ------ | மேன்மை, மேல் |
| 37. | மோ | ------ | முகர்தல், மோதல |
| 38. | யா | ------ | அகலம், மரம் |
| 39. | வா | ------ | அழைத்தல் |
| 40. | வீ | ------ | பறவை, பூ, அழகு |
| 41. | வை | ------ | வைக்கோல், வைதல், வைத்தல் |
| 42. | வௌ | ------ | கௌவுதல், கொள்ளை அடித்தல் |

## புதிய உறுப்பினர்கள்



இம்மாத இதழ் ஆடுதுறை ரோட்டரி சங்கத்தில் மாதாந்திர செயல்பாடுகளையும், சேவைகளையும், நலத் திட்டங்களையும் பதிவு செய்து சமூகத்திற்கு வெளிப்படுத்தும் நோக்கில் இம்மாத இதழ் வெளியிடப்படுகிறது.

என்றும் சேவைப்பணியில்...

| | | |
|---|---|---|
| Rtn.L.**செந்தில்குமார்** | Rtn.B.**செந்தில்** | Rtn.D.**மோகனசுந்தரம்** |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

***உலகில் சிறந்த ஜோடி***

சிரிப்பும் - கண்ணீரும் தான்.
இரண்டும் அடிக்கடி
சந்திப்பதில்லை, அப்படி
சந்தித்துக் கொண்டால்
அது ஓர் அழகிய தருணம்.

***இதழ் பொறுப்பாளர்கள்***

| | |
|---|---|
| Rtn.N.**செல்வக்குமரன்** | M.**முத்துக்குமரன்** |
| திட்ட வகுப்பாளர் | ஒருங்கிணைப்பாளர் |
| ஆடுதுறை ரோட்டரி சங்கம் | ரோட்டரி சமுதாய குழுமம், நரசிங்கன்பேட்டை. |





பள்ளி அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ - மாணவிக்கு சான்றிதழ்



கல்லூரி அளவில் கல்வி உதவித்தொகை வழங்கியது



போலியோ நிதியை பொருளாளரிடம் ஒப்படைத்தபோது



விழா நிகழ்வில் கூட்டத்தில் ஒரு பகுதி



கனடா ரோட்டரி மு.ஆளுநரை சந்தித்த உறுப்பினர்கள்






ஆடுதுறை ரோட்டரி சங்க உறுப்பினர்கள் குழு படம்